***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi***
***CC.No. 165/2017 – P.W. 1 (LW1)***

| | |
|---|---|
| *Name* | அறிவழகன் |
| *Father/Husband's Name* | வீரபாண்டியன் |
| *Village* | மேலவாசல், மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 49 |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 25.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். மேலவாசல் திருமுருகன் அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் ஆசிரியராக பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரி என்னுடன் உயர்நிலை பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிபவர் ஆவார்.

கடந்த 11.02.2017 ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் திருமுருகன் உயர்நிலை பள்ளிக்கட்டிடித்தில் பள்ளி கல்விக்குழு கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் வந்திருந்தவர்களிடையே சச்சரவு ஏற்பட்டு தள்ளுமுள்ளு ஏற்பட்டது. நான் அந்த சம்பவத்தில் கீழே விழுந்துவிட்டேன். என்னுடைய கீழ் உதட்டில் காயம் இருந்தது. நான் மருத்துவமனை செல்லவில்லை. ஆஜர் எதிரி அந்த கூட்டத்தில் கலந்து கொண்டதால் அவகரும், எனக்கும் இருந்த மனவருத்ததின் அடிப்படையில் அவர் தான் என்னை தாக்கியிருப்பார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் புகார் வாக்குமூலம் அளித்துவிட்டேன்.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். (புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). இச்சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, BSA பிரிவு 157 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலனைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எதிரியுடன் சமரசம் செய்துக்கொண்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரிதான். நீதிமன்றத்தில் காட்டப்படும் சமரச மனுவில் நானும் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் - சரிதான். எதிரி என்னுடன் பணியாற்றுபவர் என்ற முறையில் சமரசம் செய்துக் கொண்டுள்ளேன் என்றால் - சரிதான். (**சமரச மனுவில் உள்ள எனது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த கடந்த 11.02.2017 ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் திருமுருகன் உயர்நிலை பள்ளிக்கட்டிடித்தில் பள்ளி கல்விக்குழு கூட்டம் நடைபெற்றது. அ ந்த கூட்டத்தில் நான் என்னுடைய பதவி உயர்வு குறித்து கேள்வி எழுப்பிய போது ஏற்பட்ட தகராறில் ஆஜர் எதிரி என்னை தகாத வார்த்தைகளால் திட்டி, கையால் என்னுடைய முகத்தில் குத்தியும், கீழே விழுந்த என்னை காலால் உதைத்தும், கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் புகார் வாக்குமூலத்திலும், போலீசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது எதிரி என்னுடன் பணியாற்றுவதால் அவருடன் சமாதானம் செய்து கொண்டு அரசுத்தரப்பிற்கு எதிராகவும், எதிரிக்கு சாதகமாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi***
***CC.No. 165/2017 – P.W. 2 (LW2)***

| | |
|---|---|
| *Name* | தனராஜ் |
| *Father/Husband's Name* | கந்தசாமி |
| *Village* | மேலவாசல், மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 66 |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 25.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை வருகிறேன். அசா.1 மற்றும் எதிரி எனக்கு தெரியும்.

இருவருக்கு என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. வழக்கு குறித்து எந்த விபரமும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, BSA பிரிவு 157 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 11.02.2017 ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் திருமுருகன் உயர்நிலை பள்ளிக்கட்டிடித்தில் பள்ளி கல்விக்குழு கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் அசா.1 தன்னுடைய பதவி உயர்வு குறித்து கேள்வி எழுப்பிய போது ஏற்பட்ட தகராறில் ஆஜர் எதிரி அவரை தகாத வார்த்தைகளால் திட்டி, கையால் அவருடைய முகத்தில் குத்தியும், கீழே விழுந்த அவரை காலால் உதைத்தும், கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும்

கூறிவிட்டு, தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக அரசுத்தரப்பிற்கு எதிராகவும், எதிரிக்கு சாதகமாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 165/2017 – P.W. 3(LW4)***

| | |
|---|---|
| *Name* | அன்பழகன் |
| *Father/Husband's Name* | சுந்தரராஜு |
| *Village* | மேலவாசல், மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *64* |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 25.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். மன்னார்குடி வழக்கறிஞராக தொழில் செய்து வருகிறேன். அசா.1 மற்றும் எதிரி எனக்கு தெரியும்.

இருவருக்கு என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. வழக்கு குறித்து எந்த விபரமும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, BSA பிரிவு 157 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 11.02.2017 ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் திருமுருகன் உயர்நிலை பள்ளிக்கட்டிடித்தில் பள்ளி கல்விக்குழு கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் அசா.1 தன்னுடைய பதவி உயர்வு குறித்து கேள்வி எழுப்பிய போது ஏற்பட்ட தகராறில் ஆஜர் எதிரி அவரை தகாத வார்த்தைகளால் திட்டி, கையால் அவருடைய முகத்தில் குத்தியும், கீழே விழுந்த அவரை காலால் உதைத்தும், கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும்

கூறிவிட்டு, தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக அரசுத்தரப்பிற்கு எதிராகவும், எதிரிக்கு சாதகமாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 165/2017 – P.W. 4 (LW5)***

| | |
|---|---|
| *Name* | சந்திரன் |
| *Father/Husband's Name* | ஆறுமுகம் |
| *Village* | மேலவாசல், மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *54* |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 25.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். மேலவாசல் திருமுருகன் பள்ளியில் அலுவலக உதவியாளராக வேலை வருகிறேன். அசா.1 மற்றும் எதிரி எனக்கு தெரியும்.

நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி கையொப்பம் அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி கையொப்பத்தை நான் சொந்தவேலையாக காவல் நிலையம் சென்றிருந்தபோது போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் செய்து கொடுத்தேன். வழக்கு சம்பந்தமாக எந்த விபரமும் தெரியாது. . போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, BSA பிரிவு 157 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 11.02.2017 ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் திருமுருகன் உயர்நிலை பள்ளிக்கட்டிடித்தில் பள்ளி

கல்விக்குழு கூட்டம் நடைபெற்றது. மேற்படி அந்த கூட்டத்தில் ஆஜர் எதிரிக்கும், அசா.1க்கும் நடைபெற்ற தகராறு தொடர்பாக மன்னார்குடி நகர போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்து விட்டு, தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக அரசுத்தரப்பிற்கு எதிராகவும், எதிரிக்கு சாதகமாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.